**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 506/2025** |
| **Ranking of witness** | **:** | **PW9** |
| **Name** | **:** | **நரசிம்மன்** |
| **Father's Name** | **:** | **த/பெ.பெருமாள்** |
| **Age** | **:** | **50** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் ஆண்டிக்கொட்டாயில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.06.2025ஆம் தேதி, தொப்பூர் ஆஞ்சநேயர் கோவில் அருகே விபத்து நடந்ததாக கேள்விபட்டு பொதுமக்கள் அங்கு சென்று பார்த்தார்கள். நானும் அங்கு சென்று பார்த்தேன். அங்கு போலீசார் மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும், என்னுடன் இருந்தவர்களும் சாட்சி கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதாகும். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

சம்பவ இடத்தை போலீசாருக்கு யார் அடையாளம் காண்பித்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. நான் சம்பவ இடம் சென்றேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பத்தை எங்கு கையொப்பம் செய்தேன் என்றால், வரைபடம் வரைந்த இடத்தில்தான் செய்தேன் என்றால் சரி. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தவறு.

**மறுவிசாரணை** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.04 16:55:25 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 506/2025** |
| **Ranking of witness** | **:** | **PW10** |
| **Name** | **:** | **கவரன்** |
| **Father's Name** | **:** | **த/பெ மாணிக்கம்** |
| **Age** | **:** | **53** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது பாலக்கோடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தொப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 20.06.2025 அன்று நிலைய அலுவலில் இருந்தபோது காலை 10.30 மணியளவில் சாட்சி சித்ரா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று, அதன்பேரில் நிலைய கு.எண். 166/2025 சட்ட பிரிவுகள் 281, 106(1) BNS என்ற பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு முதல் தகவல் அறிக்கையின் நகலை ஆய்வாளரின் விசாரணைக்காக ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

புகார்தாரர் சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றும், கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று தெரிந்துகொண்டு, புகார் தந்தார் என்றார். அவ்வாறு கொடுக்கப்பட்ட அ.சா.1 புகாரின் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரி. எனவே சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல, தவறு.

<u>மறுவிசாரணை</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.04 16:55:32 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**